எம, 'தூதர்களே! கோளத்தாக்கவுண்டர் அரண்மனைக்கு சென்று அவரையும், அவர் மனைவியையும், உங்களுக்கு காலம் முடிவாகிவிட்டது என்று கூட்டிவாருங்கள்.

உடனே தூதர்கள் புறப்பட்டு அரண்மனைக்கு சென்றார்கள். அப்போது, அரியணூச்சி தன்னுடைய குழந்தையை, தொட்டிலில் வைத்து தாலாட்டிக்கொண்டிருந்தாள்.

தூதர், 'அம்மா நீங்களா! அரியணூச்சி கவுண்டிச்சி? உங்கள் கணவர் கோளத்தா கவுண்டர்?'

அரிய, 'சுவாமி! ஆமாம் நாங்கள் தான்!

தூதர், 'அம்மா! உங்களுக்கு காலம் முடிவாகிவிட்டது, என்று தெய்வ சபையிலிருந்து, ஈஸ்வரன் எம தூதரை அனுப்பியுள்ளார்; எம தூதர் வந்து யானைமுக பிள்ளையார் கோவிலில் இருக்கிறார். உங்கள் இரண்டு பேரையும் உடனே கூட்டிவரச் சொன்னார்.'

பாட்டு,
அரிய சுவாமி!

// சாமி எங்களுக்கு கால நல்ல முடிவாச்சா
அங்கு முடிவாச்சோ
சாமி எங்களுக்கு கர்த்தனுடைய ஓலை வந்து
அங்கு ஓலை வந்து.
எட்டெடுத்தும் பொய்யாச்சோ சாமி பொய்யாச்சோ
எங்களுக்கு எமனுட ஓலை வந்து சாமி ஓலை வந்து.
பத்தெடுத்தும் பொய்யாச்சோ ராஜா பொய்யாச்சோ
பரமனுட ஓலை வந்து சாமி ஓலை வந்து //

'சாமி! 5 வருஷம் குழந்தை இல்லாமல் இருந்து, எம்பெருமான் கிருபையால், குழந்தை கிடைத்து ஐந்து வருஷம் ஆகிறது. ஆகையால், இன்னும் 5 வருஷம், உயிருடன் இருக்க உத்தரவு கொடுங்கள்; குழந்தைக்கு 10 வருஷம் ஆனவுடன் வந்து விடுகிறோம் என்று அழுதாள்.

தூதர், / அம்மா/ எங்களிடம் அதெல்லாம் சொல்லவேண்டாம்?
நாங்கள் பிமதர்மர் உத்தரவு பிரகாரம் செய்ய வேண்டும்,
சீக்கிரம் இரண்டு பேரும் புறப்படுங்கள்; அவரிடம்
வந்து நீங்கள் உங்கள் முறையைச் சொல்லுங்கள்,
உடனே அரியநாச்சி ஏனுகு பட்டகசாலைக்கு
சென்று நாதனை எழுப்பி,

வசனம், // சாமி/ நம்மனுக்கு காலம் முடிவாச்சு
கர்த்துருடனேல வந்தாச்சு.
எட்டெடுத்தும் பொய்யாச்சு
நம்மனுக்கு எருடனேல வந்தாச்சு.
பத்தெடுத்தும் பொய்யாச்சு.
நம்மனுக்கு பாமனுடனேல வந்தாச்சு //

/ நாதர்/ எமன் வந்து பிள்ளையார் கோவிலில் இருக்கிறாராம், தூதர்கள் வந்திருக்கிறார்கள் நம்மை கூட்டிப் போக, நீங்கள் போகலாம் என்றான்'

கோகிலை/ அம்மா/ நம்மனுக்கு காலம் முடிவாகிவிட்டதா?
சரி புறப்படு போகலாம் என்று இரண்டுபேரும்
எழுந்து புறப்பட்டு எமனிடம் வந்து சேர்ந்தார்கள்.

பாட்டு// அட்டம் பணியுறாரே எமனுக்கு
ஆளடிமை செய்யுறாரே.
பாதம் பணியுறாரே எமனுக்கு
பணிவிடைகள் செய்யுறாரே.
சுற்றிவலம் வந்து அங்கு சூரியனைத் தெண்டனிட்டார்
பக்கம் வலம் வந்து அங்கு பகவானைத் தெண்டனிட்டார்

எம, / அம்மா/ நீங்கள் அரியநாச்சி கவண்டிச்சி?
உங்கள் பக்கத்தில் நிற்பவர் உன்நாதனா?/

அரி, / சாமி/ ஆமாங்க நாங்கள் தான்!

எமன், / அம்மா/ உங்கள் இருவருக்கும், காலம் முடிவாகிவிட்டது. அதனால், இன்றைக்கு நாளைக்குள் உங்கள் உயிரை கொண்டு வரும்படி சொன்னார்—

23, ர.ஷ்பரண். ஆகையால், நீங்கள் யாரிடம் சொல்லவேண்டுமோ சொல்லிவிட்டு, உடனே புறப்படுங்கள்!

அரிவா/ சாமி! எங்களுக்கு காலம் முடிவச்சோ?
கர்த்துடைய ஜெபவந்து.
சாமி! 45 வருஷம் எங்களுக்கு குழந்தை இல்லாமல்,
மாயருட கிருபையால் குழந்தை கிடைத்தது,
இன்னும் 5 வயது கூட சரியாக முடியவில்லை.!

அரிவா பாட்டு" சாமி ஐந்தெடுத்தும் பொய்யாச்சோ
சாமி பொய்யாச்சோ
இனி ஐந்து நல்ல வயதும் இங்கோ
என் ஆளன் சிறு குழந்தை சாமி சிறு குழந்தை"

வசனம்/ பல்லு நந்து முளையாத பாலன் சிறு குழந்தை!
ஐந்து வயது நல்ல ஆகிறது குழந்தைக்கு!
சுவாமி! குழந்தைக்கு 5 வயது ஆகியும் ஆகாமலும் விட்டு, இப்போது நீங்கள் வந்து விட்டால், குழந்தையை யார் காப்பாற்றுவார்கள், தாங்கள், இன்னும் 5 வருஷம் எங்களுக்கு உயிர்பிச்சை கொடுத்தால், குழந்தைக்கு 10 வயது ஆனவுடன், குழந்தைக்கு திருமணம் செய்து விட்டு வந்தால், எங்களுக்கு மேல் உலகில் புண்ணியம் கிடைக்கும். இல்லையேல் நாங்கள் குழந்தையை வளர்த்தியும் பலனில்லாமல் போய் விடும் சாமி.!

எம/ அம்மா தாயே! அந்தக் குறையெல்லாம் என்னிடம் சொல்லவேண்டாம்; தெய்வசபை வந்து ர.ஷ்பனிடம் கேட்டுக் கொள்; நாங்கள் அவர் உத்தரவுபிரகாரம் நடக்கவேண்டும்; ஆகையால், இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கிறது; அதற்குள் யாரிடம் சொல்லவேண்டுமோ சொல்லிவிட்டு புறப்படுங்கள் போகலாம்.

அரிவா/ அடே பாவியில்லே சேவகா! சொற்ப நேரம் சென்று, மூன்று அரசர்களையும், கிராமத்து கவுண்டர்களையும்,

உடனே பேய், பொன்னிவள நாட்டுக்கு கூட்டிவா. எதற்கு என்று கேட்டால், கோனாத்தாக் கவுண்டருக்கும், அரியணாச்சி கவுண்டிச்சிக்கும், காலம் முடிவாகி தெய்வசபையில் இருந்து எமதூதர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல். அப்படியே சேவகர்கள் சென்று, சோழ நாட்டில் அசுர்களிடமும், குடிபடைகளிடமும், சொன்னார்கள். மூன்று அசுர்களும் குடிபடைகளும் பொன்னிவள நாடு வந்து எமதர்மனை கண்டு—

பாட்டு,,
"அட்டம் பணியுறோ எமனுக்கு
ஆளடிமை செய்யுறோ
பாதம் பணியுறோ ராஜனுக்கு
பணிவிடைகள் செய்யுறோ.
சுற்றிவலம் வந்து சூரியனை கைமுனைந்தார்
பக்கம் வலம் வந்து பகவானை தெண்டனிட்டார்."

எம.' அசுர்களே/சரணமென்ற பேர்களுக்கு
மரணமொரு நாளுமில்லை!

அப்போது 'அரியணாச்சி மூன்று அசுர்களையும் பார்த்து முறையிட்டாள்.

பாட்டு,, "காலம் நல்ல முடிவாச்சு சாமி முடிவாச்சு.
எங்களுக்கு கர்த்தருடைய ஓலை வந்தாச்சு.
பத்தெருத்தும் ராஜாவே பொய்யாச்சு.
அங்கு பரமனுடைய ஓலை வந்தாச்சு.
எட்டெருத்தும் ராஜாவே பொய்யாச்சு
சாமி எமனுடைய ஓலை வந்தாச்சு
இங்கு வந்தாச்சு."

' சாமி ராஜா/தாங்கள் இன்னும், 5 வருஷம் உயிர் பிச்சை வாங்கி கொடுத்தால், குழந்தைக்கு 10 வயது ஆனவுடன் கல்யாணம் செய்துவிட்டு

உக, நாங்கள் தெய்வ சபை சென்றால், எங்களுக்கு புண்ணி
யமுண்டாகுமாவே.!

அரசர்! அம்மா! கரியைத் துடைக்கலாம்,
காவேரியை நீந்தலாம், விதியை துடைக்க பிர்மனாலும்
ஆகாது-
அன்று எழுதும் கர்த்தன், அழித்து எழுதுவதில்லை,
அம்மா! நாம் வரும் விதியை தடுக்க முடியாது.!

அரியனை பாட்டு,,

"வனை என்சாமி பார்க்கவிட்டு நான்
ஏந்திளையால் அரண்பதி போறனுங்கோ
சாமி போறனுங்கோ.
பாலனை சாமி பார்க்கவிட்டு இங்கு
நான் இவன்பதி போறனுங்கோ
சாமி போறனுங்கோ.
குழந்தையை பார்க்கவிட்டு சாமி
நான் தொம்பினயாள் அரண்பதி போறனுங்கோ
சாமி போறனுங்கோ.
நான் மைந்தனை பார்க்கவிட்டு சாமி பார்க்கவிட்டு.
அனிமா பாவி தெய்வசபை போறனுங்கோ
அங்கு போறனுங்கோ."

வசனம்,/

சாமி! குழந்தையை பார்க்கவிட்டு தொம்பினயாள்
போறனுங்கோ.

நான் மைந்தனை பார்க்கவிட்டு மாபாவி
போறனுங்கோ.!

இந்த மாதிரி முறையிட்டு, சுற்றி, சுழன்று வந்து
அழுதாள். அரியனைக்கு - அரசே! தாங்கள் தான்
என் குழந்தையை காப்பாற்ற வேண்டும்; மற்றும்
குடிபடைகளே! என் குழந்தையை நீங்களும்
பாது காத்து, வயது வந்தவுடன் திருமணம்
செய்து எங்களுக்கு உள்ள பிரகாரம்-

நாட்டையும், அதைசார்ந்த குடிபடைகளையும், ஆட்படை
க்கு மாறு தங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்
கிறேன் என்று குழந்தை பெரியவன் ஆனவுடன் செல்லா
த்தானுக்கு என்று கால ஆணையும் சரியாக நடத்து
ம்படி கட்டளையிடவும் எல்லோரிடமும் விடை
பெற்றுக் கணவனும், மனைவியும் நாலேண் வழியாக
தெய்வசபைக்கு சென்றார்கள்.

குழந்தை குன்னுடையா சாமி தாயும் தகப்பனும்
போவதைமறையும் வரை பார்த்துக்கொண்டிருந்தார்.
மறைந்தவுடன் பூமியின் மேல் விழுந்து புரண்டு
அழுதார்.

பாட்டு, "சாந்தனையும் மேனியெல்லாம் அங்கு மேனியெல்லாம்
சருகுபட பூமியிலே புரண்டழுதார்
அங்கு புரண்டழுதார்,
புனுகளையும் மேனியெல்லாம் அங்கு மேனியெல்லாம்
புழுதிபட தரையிலே புரண்டழுதார்
அங்கு புரண்டழுதார்."

குன்னுடையா சாமி பாட்டு,
" தாயை நல்லோ தாயை இழந்தனுங்கோ
சாமி இழந்தனுங்கோ.
நான் தனி வழியே நின்னழுதேன்
சாமி நின்னழுதேன்.
தகப்பனை நானிழந்து சாமநானிழந்து.
தலைவிரிக்க நாளாச்சே
சாமி நாளாச்சே"

வசனம்
' சாமி! தாயை இழந்தனுங்கோ, நான்
தகப்பனை நானிழந்து தலைவிரிக்க நாளாச்சே,
என்னதான் செய்வனுங்கோ
ராஜாவே! எப்படி நானிருப்பேன்,
நான் தாயை பறிகொடுத்து நான்
தனியில் இருப்பேனு!

பாட்டு,,

//அண்ட நல்ல என்சாமி நிழலுமில்லை சாமி நிழலுமில்லை
என்னை ஆதரிப்பார் இவ்விடத்தில் ஒருவரில்லை
சாமி ஒருவரில்லை.
நிற்க நல்ல சாமி நிழலுமில்லை சாமி நிழலுமில்லை
நான் நின்றாட கொம்புமில்லை சாமி கொம்புமில்லை
கோழியை பலி கொடுக்கு சாமி பலி கொடுத்து
குஞ்சு போலே ஆனனுங்கோ சாமி ஆனனுங்கோ.

சுற்றி வருவான், குழந்தை சுழன்று வருவான், பக்கம் வருவான், பறந்து வருவான், குன்னுடையா சாமி இப்படி கதறி அழுகும் போது அரசர் ஓடிப்போய் எடுத்து! அப்பா! உன் தாயும், தகப்பனும், காலம் முடிவாகி தெய்வ சபை சென்றுவிட்டார்கள்! அப்பா நாங்கள் எல்லாம் மனிதர் அல்லவா, நாங்கள் உன்னை காப்பாற்றுகிறோம் அழுகாதே என்று— வாரிக்கையில் எடுத்து மணி முகத்தை முத்தமிட்டு, தேறுதல் சொல்லி, அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். எட்டு நாளாக குழந்தைக்கு தேறுதல் சொல்லிக்கொண்டு, அரசரும், குடிபடைகளும், பொன்னிவள நாட்டில் அரண்மனையில் இருந்தார்கள்.

அந்த பிரகாரம் பொன்னிவள நாட்டில் இருக்கும் போது—
தங்கவள நாட்டில் ஆயிரம் பங்காளிகளும், கோளாத்தாக் கவுண்டர் இறந்த செய்தி கேட்டு, யானைமுக பிள்ளையார் கோவிலில் ஆயிரம் பேரும் கூடினார்கள். ஆயிரம் பேரில் பழனிச்சாமிக் கவுண்டர், என்பவர் பெரிய வீட்டு அண்ணனை கூப்பிட்டு, ஏனுங்க அண்ணா! நீங்களும், ரொம்ப நாளாக பிழைத்தேன், என்று சொல்கிறீரே அரசர் எல்லோருக்கும் மூத்தவரான பெரியப்பா கோளாத்தா கவுண்டனை, பொன்னிவள நாட்டில் நந்தை பூமியில் கொண்டு போய் வைத்தார்கள்; நம்மளை கொண்டுவந்து, இந்த தங்கவள நாட்டில் புந்தை பூமியில் வைத்தார்கள்;

28,

பெரியப்பாகோளத்தாக் கவுண்டர், ஏராளமான திரவியம் சம்பாதித்து, 4 வருஷம் குழந்தை இல்லாமல் காட்டில் இருந்து, யார் குழந்தையோ எடுத்து வந்து வளர்த்தார்கள்; இப்போது அவர்கள் காலம் முடிவாகி தெய்வசபை சென்றுவிட்டார்கள்; ஆகையால், நாம் இப்போதே பொன்னிவளநாடு சென்று, அரசர்களிடம் சொல்லி, நம் பங்கு பிரகாரம். நாட்டையும், திரவியத்தையும், ஆயிரத்து ஒரு பங்கு பங்கி நம் ஆயிரம் பேருக்கு ஆயிரம் பங்கும், அந்தப்பையனுக்கு ஒரு பங்கும் பிரித்துவிடலாம் புறப்படுங்கள் போகலாம்.

பாட்டு // தங்கவளை என்றதொரு நாடு விட்டு
பொன்னிவள என் சாமி நாடு வாரார்
மண் போட்டு என்றதொரு பொன் விளையும்
மகுட பொன்னிவள நாடு வாரார்
யானைமுக என் சாமி பிள்ளையார்
ஐங்கரனார் கோவிலுக்கு வாராரே. //

பங்காளி கவுண்டர்கள் ஆயிரம் பேரும் பொன்னிவளநாடு வந்து. உச்சி உருவம் மத்தியான நேரம் பிள்ளையார் கோவிலில் கூடினார்கள்.

பெரியவீட்டுக்காரர்! அப்பா பழனிச்சாமி! நாம் எல்லோரும் சேர, அரண்மனைக்கு போக கூடாது. முதலில் யாராவது 10 பேர் போங்கள், போய் அந்தப்பையனை கொஞ்சம் மிரட்டுங்கள்; மற்றவர்கள் எல்லோரும் பின்னால் போகலாம். அதன் பிரகாரம் 10 பேர் புறப்பட்டு அரண்மனைக்கு சென்றார்கள் அது சமயம் குழந்தை குன்னுடையா சாமி விளையாடிக்கொண்டிருந்தார். பங்காளிகள் போனதும் குழந்தையை—

பாட்டு,, // எட்டி மயிர் பிடித்தானே சண்டாளன்
அவன் இட்டானே நாலடி கன்னத்திலே
பிடரி மயிர் பிடித்தானே சண்டாளன்
அவன் போட்டானே நாலடி கன்னத்திலே //

அடி பொறுக்கமுடியாமல் தன்னுடைய சாமி பதறினார். இதைகண்ட அரசர் ஓடிவந்து சாமியை கையில் எடுத்து, வாரிக்கையில் எடுத்து, மணிமுகத்தை முத்தமிட்டு,

அரசர், 'சண்டாளா! சதிகாரா! கொலைகாரா எதற்காக குழந்தையை இப்படி அடித்தாய்? உன்னுடைய நாடு வேறு; எல்லை வேறு; எங்கள நாட்டில் இருந்து இங்கு வழக்கு செய்ய வந்தீர்களா?'

பங்காளி, 'அரசே! மன்னிக்க வேண்டும், இந்தக் குழந்தையை என் பெரியப்பா, பெரியம்மா பெற்றார்களா? எவளோ கானலில் விறகுக்கு வந்த இடத்தில், பெற்றுவிட்டு ஓடிவிட்டாள்; என் பெரியப்பா அனதை எடுத்துக் கொண்டு வந்து வளர்த்தார்; ஆகையால், இந்த பையனுக்கு, பொன்னிவள நாட்டையும், அதை சேர்ந்த குடிப்படைகளையும், செல்வங்களையும் விடமாட்டோம்; அப்படியே விட்டாலும் ஆயிரத்து ஒரு பங்கு தாயங்கி ஒரு பங்கு தான் கொடுப்போம்.'

அரசர் 'அப்பா பங்காளி கவுண்டர்களே! குழந்தையை எடுத்து வந்து, 5-வருஷமாக வளர்த்தார்கள், உங்கள் பெரியப்பா அப்படியிருக்க, நீங்கள் இப்போது, அவர்கள் காலம் சென்றபின் வந்து பங்கு கேட்கிறீர்கள்; சமையத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தீர்களா? ஏன் அவர்கள் உயிருடன் இருக்கும் போது வந்து கேட்டிருக்கலாம் அல்லவா? ஆகையால், நீங்கள் இப்போது வந்து வாதாடுவது முறையல்ல.'

பங்காளி 'அரசே! இன்னும் கொஞ்சநாள் பொறுத்து, நாங்கள் வரலாமென்று இருந்தோம்; அதற்குள் அவர்கள் காலவந்து போய்விட்டார்; என் செய்வது! அரசே! தாங்கள் இந்த நாட்டை பற்றியோ, குழந்தையைப் பற்றியோ, எதுவும் கேட்க கூடாது.

இதில் உங்களுக்கு எந்தவிதமான பாத்தியமும் கிடையாது, பங்காளிகள் நாங்கள் இருக்கிறோம் குழந்தையை காப்பாற்றிக் கொள்கிறோம்.)

அரசர்: 'அப்பா! நீங்கள் காப்பாற்றுவது எனக்குத் தெரியும், இந்த பையனை ஏதோ செய்யலாமென்று வஞ்சக புத்தியை மனதில் வைத்திருக்கிறீர்கள், இந்தக் குழந்தையை, நீங்கள் கூட்டிப்போவது பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை; ஆனால் ஒரு நிபந்தனை, இந்தக் குழந்தை உங்களிடத்திலிருந்து, உயிர் பிழைத்து பெரியவனாகி வந்தால்,

"காட்டுக்காரன் காட்டுக்கு வந்தான்
வீட்டுக்காரன் வீட்டுக்கு வந்தான்" என்ற

பழமொழி போல், அவனுக்கு சேர்ந்த இந்த பொன்னிவள நாட்டை, அவனுக்கே ஒப்படைக்க வேண்டும்;' என்று, சொல்லிவிட்டு, அரசர்கள் சோழதேசம் சென்று விட்டார்கள். குடிபடைகளும் சென்று விட்டார்கள். எல்லோரும் போன பிறகு, பங்காளிகள், பங்குப்பிரகாரம் பூமியையும், திரவியத்தையும் பங்கி யானைமுக பிள்ளையார் கோவிலில், கொண்டு போய் வைத்தார்கள்.

பங்காளிகளில் ஒருவர்: 'ஏனுங்க, அண்ணா! அரசர் சொன்னதை பார்த்தீர்களா? இன்னுடையான் உயிர் பிழைத்து வந்தால், அவனுடைய தேசத்தையும், குடிபடைகளையும், அவனுக்கே, விடும்படி சொல்லியிருக்கிறார், நாமும் விடுவதாக சொல்லியிருக்கிறோம்,

குன்றுடையான், ஒரு காலத்தில் உயிர் பிழைத்து வந்தால் இந்த அண்ணமாரை ஏன்தாய் தந்தை கட்டியது என்று சொல்வான். ஆகையால், நாம் இப்போதே இந்த அண்ணமாரை அடித்து நிரவி, மூன்று உழவு போட்டு மூப்பு ஊதியாக்கி, ஆமணக்கங் கொட்டையை அள்ளி விதைத்து விடலாம்' என்று பேசி அப்படியே செய்தார்கள்.

பங்காளி ஒருவர். 'ஏனுங்க, பெரிய வீட்டு அண்ணா! இந்தப் பையனுக்கு உங்கள் வீட்டில் சாதம் போட்டு விடுங்கள்; அவன் பங்கையும் திரவியத்தையும், வைத்துக் கொள்ளுங்கள்.'

பெரிய கவுண்டர். 'அப்பா! உங்கள் நங்கை சமாச்சாரம் உனக்கு தெரியாதா? உன் நங்கை இந்தப்பையனுக்கு சாதம் போடுவாளா?'

மற்றவர் 'ஏனுங்க, அண்ணா! இந்தப் பையனுக்கு சும்மாவா சோறு போடுகிறோம், வேண்டிய திரவியம் இருக்கிறது வைத்துக் கொண்டு போடக்கூடாதா?'

பெரிய கவுண்டர் ஏப்பா! உங்கள் நங்கை விஷயம் தெரிந்தும் இப்படி பேசுகிறீர்களே? சரி, நான் கூட்டிப் போய் பத்து நாளைக்கு வைத்திருக்கிறேன், என் வீட்டில் சோறு சரியாக போடா விட்டால், உங்களிடம் கூட்டி வந்து விட்டு விடுவேன்' சரி புறப்படுங்கள் போகலாமென்று,

('அடே, குன்றுடையாக் கவுண்டா! இந்தத் துணியை கோமணம் கட்டிக் கொண்டு, புறப்படு.')

பாட்டு, "பொன்னிவள நாடு விட்டு நாகு விட்டு
தங்கவளர் என்சாமி நாடு வாரார்
வேகாத என்னுத்தா வெய்யிலிலே
வெந்து நெரிந்சு என் சாமி கானலிலே
கவுண்டர் கூடவும் என்னுத்தா முன் நடக்க
குன்றுடையார் என்சாமி பின் தொடர்ந்தார்"

உச்சி உருவம் மத்தியான நேரம் தங்கவளநாடு போய் எல்லோரும் பிள்ளையார் கோவில் போய் சேர்ந்து. 'அண்ணா! நீங்கள் பையனைக் கூட்டிப் போங்கள்' என்று, எல்லோரும் அவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். பெரிய வீட்டு கவுண்டர் வீட்டுக்கு போகும் போது நடை சாத்தியிருந்தது. 'பெண்ணே கதவை திற' என்று சத்தம் போட்டார். மனைவி உடனே ஓடிவந்து கதவை திறந்து விட்டாள். கதவை திறந்ததும் பையனை பார்த்து.

மனைவி. 'நாதா! உங்கள் பின்னால் வரும் பையன் யார்?'

கவுண்டர். 'அவன்தான், பொன்னிவளநாட்டில் பெரியப்பா. கோளாத்தாக் கவுண்டர் மகன் குன்னுடையா சாமி.'

மனைவி 'நாதா! அவனை, இங்கு எதற்கு கூட்டி வந்தீர்கள்? உங்களுக்கே நான் சும்மா வைத்துக் கொண்டு சோறு போடுகிறது மில்லாமல், அவனுக்கும் போட வேண்டுமா?'

கவுண்டர். 'பெண்ணே! இந்த பையனுக்கு, நாம் சும்மா சோறு போட வேண்டியதில்லை. பூமியில் ஒரு பங்கும், திரவியம் ஒரு பங்கும், இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு போடலாம்' என்று சொன்னார்.

மனைவி. 'சரி! 10 நாளைக்குத்தான் போடுவேன்' என்றாள்.

குன்னு. 'அய்யா! எனக்கு சாதம் போடு, பசி ஆகிறது' என்று குழந்தை அழுதான்.

கவுண்டர். 'பெண்ணே! பையனைக் கூட்டிப் போய் சாதம் போடு. நான், குளித்து விட்டு வருகிறேன்.'

மனைவி. 'சரி போய் வாருங்கள் நாதா! நான் அவனுக்கு சாதம் போடுகிறேன்' என்று குழந்தையை, 'வாடா குறவா!' என்று காதைப் பிடித்து இழுத்துப் போய் சுற்றுத் திண்ணையில் உட்கார வைத்து, பெருநாட்களுக்கு முன் காய்ச்சிய ராகிக்கூழ், கெட்டியாக இருக்கிறது என்று மறுபடிக் கொஞ்சம் தண்ணீர் விட்டு கரைத்து. டம்ளரை கொடுத்து 'ஊற்றி சாப்பிடடா!' என்று கண்டித்தாள்.

அதை பார்த்து குன்னுடைய ராஜமன்னன்,
கோடையிடி மணி வேந்தன்.

வசனம். 'ஆகா! அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா!
சங்கு சக்கரா வைகுந்தவாசகா!
பாலமலை ஜோதியா பரமகுருதன்னதி!
ஏழை பரதேசி எம்பெருமாள் மாயவனே!

ஆயிரம் நாமம் பெற்ற சாமி! என்னுடைய ஆயிரமா
நிலத்தையும், ஏழை கோடி திரவியத்தையும்,
பங்காளிகளுக்கு தத்தம் செய்து விட்டு.
அந்த கதிக்கு ஆளானேன் மாயவா!'

குன்னு.
பாட்டு. "இந்த கஞ்சி குடிப்பதற்கு நான் குடிப்பதற்கு.
எழுதினையோ என் தலையில் சாமி என் தலையில்
நான் பாலோடு பழந்தாமா சாதங்கள்.
அங்கு சாதங்கள்.
நான் பசியாமல் சாப்பிட்டதும்
சாமி சாப்பிட்டதும்.
அந்த பாலு நல்ல மாயவனே செரிக்கவில்லை
அங்கு செரிக்கவில்லை.
நான் படுக்கை சுகம் மாயவா கொள்ளவில்லை
அங்கு கொள்ளவில்லை.
நெய்யோடு சாதங்கள் அங்கு சாதங்கள்.
நெருங்கத்தான் சாப்பிட்டதும்
சாமி சாப்பிட்டதும்
எனக்கு நெய்யும் செரிக்கவில்லை
சாமி செரிக்கவில்லை
நான் நித்திரை சுகம் அங்கு கொள்ளவில்லை
சாமி கொள்ளவில்லை"

வசனம், சாமி அழுகுறாரே சர்வேம வாடுறாரே.
'மாயவா! ராக்கஞ்சி குடிப்பதற்கு தலையில்
எழுதிவிட்டாரையா?'

கவுண்டிச்சி. / என்டா! அடே கிருஷ்ணா! எடுத்து குடியடா கஞ்சியை! என்று அதட்டியவுடன், குன்னுடையா சாமி, டம்ளரை கையில் எடுத்து சாப்பிடும்போது, சாப்பிடத் தெரியாமல் இரண்டு கடவாயிலும் வடிந்து பாதிக் கஞ்சி கீழே போனது; பாதி கூழை சாப்பிட்டுவிட்டு சாப்பிட முடியாமல் அப்படியே வைத்துவிட்டு நடை சாவடியில் வந்து குன்னுடையா சாமி நின்றான்.

அப்போது கவுண்டர் குளித்துவிட்டு வந்து சாமியை பார்த்து, என்னப்பா சாப்பிட்டாயா? என்றார்.

கு. சாமி. / அய்யா! எனக்கு குழம்பும் சாதமும் கிடைக்கவில்லை; ராகி கூழை ஊற்றினார்கள்; நான் சாப்பிட முடியவில்லை அப்படியே வைத்து விட்டு வந்துவிட்டேன். /

கவுண்டர். / சண்டாளி, சதிகாரி! எனக்கு சாதம் வேண்டாம் குழந்தைக்கு நன்றாக குழம்புடன் போடு என்று சொன்னேனே, அவன் சொத்துக்களையும் வைத்துக் கொண்டு, துரோகம் செய்துவிட்டாளே பாவி! என்று கவுண்டரும் வீட்டில் சாப்பிடவில்லை சாமியை கூட்டிக்கொண்டு கடையில் போய் சாப்பிட்டார். இந்தப் பிரகாரம் 10 நாள் முடியமட்டும் சாமிக்கு ராகிக்கஞ்சியை தவிர வேறு சோறு போடுவதில்லை. இதை கவுண்டர் பார்த்து, மனம் நொந்து, இனி நம் பையனை இங்கு வைத்திருப்பது முறையல்லவென்று எண்ணித் தம் பையனை கூட்டிக்கொண்டு உச்சி உருமம் மத்தியான வேளை பிள்ளையார் கோவிலுக்கு போய், தலையாரியை கூப்பிட்டு ஆயிரம் வீட்டுக்காரரையும் பிள்ளையார் கோவிலுக்கு கூட்டி வரும்படி சொன்னார். தலையாரி போய் சொன்னவுடன், ஆயிரம் வீட்டுக்காரரும் பிள்ளையார் கோவிலில் வந்து கூடினார்கள்.

ஒருவர் / என்னங்க பெரியவீட்டு அண்ணா! குழந்தையை, 10 நாளுக்குள் இந்தமாதிரி செய்துவிட்டீர்கள்.

பையன் செத்துவிடுவான் போல் இருக்கிறது. அவனுடைய சொத்துகளையும் வைத்துக் கொண்டு ஏன் இப்படி செய்கிறீர்கள்? என்று கேட்டார்கள்.

வெ. கவு. ஏப்பா! நான்தான் உங்களுக்கு முன்னமே சொன்னேன்; உங்கள் தங்கையாள் சோறு போடமாட்டாள் என்று. ஆகையால், குழந்தையை நீங்களே ஒப்புக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் எல்லோரும் சேர்ந்து அதற்கு ஒரு முடிவு செய்யுங்கள்.

கூட்டத்தில் ஒருவரும் பேசாமல் இருப்பதை பார்த்து பழனிச்சாமி கவுண்டர் எழுந்து, ஏன் எல்லோரும் பேசாமல் இருக்கிறீர்கள்? இதற்கு ஒரு முடிவு சொல்லுங்கள் என்றார்.

மற்றவர்: அப்பா பழனிச்சாமி! நீயே ஒரு முடிவு சொல்.

பழனி: எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, என்னவென்றால், ஒருத்தர் வீட்டில் கொண்டுபோய் பையனை தனியாக வைத்திருந்தால், இப்படித்தான் வந்து சேரும். ஆகவே, குன்னுடையாக் கவுண்டனுக்கு ஒரு சட்டியும், சொப்பும் வாங்கிக் கொடுத்து; நம் ஆயிரம் வீட்டுக்கு ஒரு எருமை இருக்கிறது. குன்னுடையாக் கவுண்டன் காலையில் எழுந்ததும், 10 வீட்டில் சாதம் வாங்கி சாப்பிட்டுவிட்டு, சட்டியை பள்ளிக்கூட சாவடியில் வைத்துவிட்டு, எருமைகளை ஓட்டிபோய் காசிக் கரையில் மேய்த்து மத்தியானம் ஓட்டிவந்து மந்தையில் விட்டுவிட்டு, மத்தியானம் பத்து வீடு வாங்கி சாப்பிடட்டும். இதுபோல் ராத்திரிக்கும் வாங்கி சாப்பிட்டுவிட்டு, பள்ளிக்கூட சாவடியில் போய் படுத்துக் கொள்ளட்டும். தினமும் இதுபோல் நடந்துகொள்ளட்டும். இதுதான் நல்ல முடிவு என்று சம்மதித்தார் எல்லோரும். அடே குன்னுடையா! சட்டியை போய் எடுத்துக்கொள், என்று அதட்டினார்கள்.

36, குன்னுடைய ராஜமன்னன், கோட்டையிடி மணிவேந்தன்,
வாய்பேசா தர்மன், மறைச்சாமி புண்ணியனாம்.
/ பாலமலை ஜோதியா / பரமகுரு ~~[illegible]~~ ~~[illegible]~~ தன்னை
அழைப்பார தேதி எம்பெருமாள் மாயவனே!

கு. சாமி
பாட்டு,,

"சாந்தினையும் பரந்தாமா கையிலே
நான் கையிலே.
நான் சட்டியை எடுக்கும்படி
எழுதினையோ என்தலையில். இங்கே என்தலையில்
புனுகினையும் கையிலே நான் கையிலே
ஓட்டியை எடுக்கும்படி இங்கு
எழுதினையோ என்தலையில் சாமி என்தலையில்"

வசனம். சாமி அழுகுறாரோ சரீரமே வாடுறாரோ.
/ சங்கு சக்கரா வைகுந்தவாசகா / என்னுடைய நாட்டையும், திரவியத்தையும். பங்காளிக்கு விட்டு விட்டு. நான் சட்டியை எடுத்து பங்காளிகள் வீட்டில் இரந்து குடிப்பதற்கு எழுதினையோ? காஞ்சி நாதா?

என் அங்கம் பதறுது, ஆத்மாவும் சோருது, என் சென்மம் நடுங்குது, சரீரமே வாடுது.
/ சுவாமி / நான் தாயை இழந்து, தகப்பனை இழந்து, இந்த கதிக்கு ஆளானேன் சாமி! என்று பரந்தாமனை நினைத்து, சட்டியை கையில் எடுத்து பங்காளிகள் வீட்டுக்கு சாதம் வாங்க சென்றார்.

பங்காளிகளுடைய கவுண்டிச்சிகள் ஆயிரம் பேரும், கூடி பேசி ஒரு நாளைக்கு முன் காய்ச்சிய ராகி கூழையே எல்லோர் வீட்டிலும் ஊற்றினார்கள். சாமி அதை வாங்கிக் கொண்டு போய் சாப்பிட்டு விட்டு, மீதியை பள்ளிக்கூட சாவடியில் உறியில் வைத்து விட்டு; ஆயிரம் எருமைகளையும் ஓட்டி போய் காடுக் கரையில் மேய்த்து மத்தியானம் ஓட்டி வந்து மந்தையில் விட்டு விட்டு சட்டியை எடுத்துக் கொண்டு சாத்துக்கு போனார்.

காலையில் பழைய சாதம் கூழ் ஊற்றினார்கள்; இப்போது மத்தியான நேரம் குழம்புடன் சாதம் போடுவார்கள். என்று சந்தோசமாக நினைத்துக் கொண்டு ஒரு தெருவில் போய் அம்மா சாதம் போடுங்கள் என்றார். எல்லோரும் கூழ் குடித்திருப்பதால் காலையில் ஊற்றிய மாதிரி ராகி கூழையே எல்லோரும் ஊற்றினார்கள் சண்டாளிகள். சாமி வாங்கிக் கொண்டுபோய் பள்ளிக்கூட சாவடியில் வைத்து சாப்பிட்டுவிட்டு, மீதியை வைத்துவிட்டு போய்விட்டார். இப்படியிருக்கும் போது.

மாயவர் சந்தோசமாக தங்கவளநாடு வந்து, குன்றுடையா கவுண்டன் என்ன வேலை செய்து சாப்பிடுகிறான் என்று பார்த்துப் போனார்.

பாட்டு, "இந்த விரகாரம் இனி நடக்குது பார்
தங்கவள நாட்டிலே அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குது பார் நல்ல பருவம்,
அப்படியே நல்லதென்று நாட்டிலே
அதிகாரம் அன்புடனே நடக்குது பார்"

குன்றுடையாசாமி

"இந்த விரகாரம் தங்கவளநாட்டில் பண்ணாடிகளிடம் எருமை மேய்த்துக் கொண்டு. இன்று குழம்புடன் சாதம் போடுவார்கள், போடுவார்கள் என்று நினைத்து போனால் தினந்தோறும் ராகி கூழையே ஊற்றினார்கள். இப்படியாக, 5 வருஷம் சென்றது. இனி நமக்கு குழம்புஞ் சாதம் கிடைக்காது என்று குன்றுடையா சாமி நினைத்து. அன்று ஆயிரம் எருமையையும் ஓட்டிக்கொண்டு காசிக்கரைக்கு சென்று எருமைகளை விட்டு விட்டு.

வசனம்) குன்றுடையாசாமி என்ன நினைக்கிறார்
கோந்த ரூபடிகன்.
தெற்கு வடக்கு அறியார்
திருவேளாங்காடறியார்.

/நாம்/ இன்னும் எவ்வளவு காலம் இருந்தாலும் பங்காளி வீட்டில் இந்த கதிதான் நடக்குமென்று. வேறு ஊர் போய் யாரிடமாவது பண்ணையத்தில் சேர்ந்தால் குடும்பம் சாதம் கிடைக்காதா என்று மனதில் நினைத்து. எருமைகளை காசிக்கரையில் முடிக்கு விட்டு.

பாட்டு, "வடக்கு நல்ல என் சாமி திசை நோக்கி
வாராரே என் சாமி ராஜதுரை.
காட்டானை சாமி காடு விட்டு
கட்டப் பொன்னி சோலை விட்டு
ஆனை நெரிஞ்சி முள்ளு அங்கு நெரிஞ்சி முள்ளு
அப்புதே சாமிக்கு தேகமெல்லாம்
குதிரை நல்ல சாமி நெரிஞ்சி முள்ளு
கொத்தோடு சாமிக்கு ஏறுது பார்.
வேகாத வெய்யிலிலே ராஜன் வெய்யிலிலே
வெந்தெரிஞ்ச கானலிலே சாமி கானலிலே,
அல்லு பொடி துள்ளு பொடி துள்ளு பொடி
அனல் கொண்டு வீசுதங்கே,"

---

" குன்னுடையா சாமி இப்படி 5 மைல் தூரம் வடக்கு திசை நோக்கி ஓடியபின் அந்த கானகத்தில் ஒரு பிரமாண்டமான பின்னமரம் இருந்தது. அதனடியில் போய் நிழலில் நின்று. மரத்தை மேலே நிமிர்ந்து பார்த்தார் மரத்தின் வாதுகள் நன்றாக காய்ந்து இருந்தது.

/ஆகா/ இந்த மரத்தின் மேல் ஏறி, இந்த விறகை ஒடித்து கீழே போட்டு ஒரு சுமை கட்டி பக்கத்து ஊரில் கொண்டு போய் யாருக்காவது கொடுத்தால், குடும்பம் சாதம் போடுவார்கள் என்று நினைத்து சாமி மரத்தின் மேல் ஏறி ஜலமேலையாக நின்று—

சங்கு சக்கரமேந்துவாசகா!
ஆபத்பாந்துவா அநாதரட்சகா!
நான் குடும்பஞ்சாதத்துக்கு கதி கெட்டு புறப்பட்டு
வந்துவிட்டேன் மாயவா!

நான் கடவுளின் சிருஷ்டியில் பிறந்தது உண்மையானால், நான் இந்த விறகை தொட்டவுடன், தங்களுடைய கிருபையால் அப்படியே கீழே விழுக வேணும் காந்த நாதா! என்று சாமி புலம்புவதை

பால் கடலில் மாயவர் பார்த்து, ஆகா! குன்னுடையான் சவுக்ஷமாக பங்காளி வீட்டில் குடும்பம் சாதம் கிடைக்காமல் கஷ்டப்பட்டு, விறகை வெட்டக்கூடியாமல் நம்மை நினைக்கிறான் என்று உடனே கருடவாகனமேறி புறப்பட்டார்.

பாட்டு:- கருட நல்லோ என்றுத்தா வாகனத்தில்
மையமாய் என் சாமி பறக்கிறாரே.
பால் கடல் என் சாமி விட்டுமல்லோ
பூலோகம் என் சாமி வாறாரே!

மாயவர் வந்து கானகத்தில் சாமிக்கு தெரியாமல் உருவத்தை மாற்றி ஈ போல் மரத்தில் போய் ஒட்டினார். குன்னுடையா சாமி விறகை கையில் தொட்டவுடன், அவர் கிருபையால் அத்தனை விறகுகளும் கீழே விழுந்தது. குன்னுடையா சாமி கீழே இறங்கி வந்து தென்னை கொடி, எட்டிக்கொடி பிடுங்கி விறகை எட்டுக்கட்டு போட்டு 15 பேர் சேர்ந்து தூக்கினாலும் தூக்க முடியாத சுமையாக மாயவர் கிருபையால் கட்டினார். கட்டிவிட்டு சாமி தும்மாட்டை கட்டி, ஜலபூஜையை பார்த்து நின்று, பரந்தாமா! இந்த விறகு சுமை இரண்டு பனை உயரம் மேலே போய், என் தலையில் வந்து நிற்க வேணும். காந்த நாதா! என்றதும் பரந்தாமன் ஈ போல் விறகு சுமையில் ஒட்டினார்.

39, 40, குன்னுடையா சாமி பெருவிரலை மெட்டியவுடன்,

பாட்டு,, "மேலே நல்ல அடடா பறக்குது பார்
ஆயருட அடடா கிருபையாலே
மாயருட அடடா கிருபையாலே
விறகுச் சுமை அந்திரமாய் பறக்குது பார்"

என்று பனை உயரம் விறகு சுமை மேலே போய் சாமி எருத்தலையில் வந்து நின்றது.

பாட்டு,, "வடக்கு நல்ல வடக்குதிசை நோக்கி
வருகிறாரே குன்னுடையா மணிவேந்தன்
மேடு கண்டா மெல்ல நடை சாமி மெல்ல நடை
பள்ளங் கண்டா பருத்த நடை வாறாரே."

வடக்குத்திசை நோக்கி சாமி வரும் போது வழியில் ஒரு ஊர் இருந்தது. அந்த ஊரில் ஒருரோடு போனது. சாமி அந்த ரோட்டில் புறப்பட்டு போனார். பக்கத்தில் இருந்த ஒரு வீட்டு காரர் விறகை கண்ணில் பார்த்து, இது என்ன வண்டியின் சத்தத்தையும் காணும், இவ்வளவு உயரமாக போகிறது என்று மதிலை எட்டி பார்த்தார்கள். 'அப்பா தம்பி! இந்த விறகு சுமையை விலைக்கு கொடுக்கிறீயா என்று கேட்டார்கள் பக்கத்து வீட்டு கார கவுண்டிச்சி.

கு. சாமி பாட்டு,, "அம்மா எனக்கு குழம்பு சாதம்
என்தாயே குடுத்தானால் சாமி குடுத்தானால்
நான் குடுத்திடுவேன் உங்களுக்கு
இந்த விறகு சுமை அங்கு விறகு சுமை
ஐந்து நல்ல வருஷமாக ஆத்தா வருஷமாக
எனக்கு குழம்பு சாதம் தாயே
கிடைக்கவில்லை சாமி கிடைக்கவில்லை"